செ.வெ.எண்: 09/2020 நாள்: 07.03.2020

**பெண்கள் அனைத்து சவால்களையும் தன்னம்பிக்கையுடன் எதிர் கொள்ள வேண்டும்**

**மாவட்ட ஆட்சியரகத்தில் நடைபெற்ற**

**சர்வதேச மகளிர் தின விழாவில் மாவட்ட ஆட்சித்தலைவர்**

**டாக்டர் க.விஜயகார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் பேச்சு !!!**

திருப்பூர் மாவட்ட ஆட்சியரக அலுவலகக் கூட்டரங்கில், மாவட்ட சமூக நலத்துறை மற்றும் மகளிர் திட்டத்தின் சார்பில் சர்வதேச மகளிர் தின விழா மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.க.விஜயகார்த்திகேயன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது

இவ்விழாவில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசும்போது தெரிவிக்கையில்,

பெண்களை சர்வதேச அளவில் பெருமைபடுத்தும் வகையில் சர்வதேச மகளிர் தின விழா இன்று(06.03.2020) நமது மாவட்டத்தில் சிறப்பாக கொண்டாடப்படுகிறது. ஒரு மனிதனின் அனைத்து தேவைகளுக்கும் பெண்களே முழு முதற் காரணியாக இருக்கின்றனர். இந்த சமுதாயம் பெண்களுக்கான அனைத்து பாதுகாப்பையும் மற்றும் அனைத்து வகையான உரிமைகளையும் வழங்கியுள்ளது. மேலும் நமது மாநிலத்தில் தமிழக அரசானது பெண்களின் வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்திற்காக எண்ணற்ற பல திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. அதில் கல்விக்கென அதிக முக்கியத்துவம் அளித்து அதற்கேற்ப வேலைவாய்ப்பினையும் உருவாக்கி தந்துள்ளது. சமுதாயத்தில் பெண்களுக்கு நாள்தோறும் எண்ணற்ற பல சவால்கள் நிறைந்துள்ளது. இதனை முழுமையாக தன்னம்பிக்கயைுடன் எதிர்கொண்டு வெற்றி பெற வேண்டும். மேலும் பெண்கள் தங்களது உடல் நலனில் அதிக அக்கறை கொண்டு ஆரோக்கியத்துடன் இருக்க வேண்டுமென மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

தொடர்ந்து, சர்வதேச மகளிர் தினத்தினையொட்டி நடைபெற்ற பேச்சுப்போட்டி, பாட்டுப்போட்டி, இசைநாற்காலி போட்டி, கவிதைப்போட்டி மற்றும் கோலப்போட்டி ஆகிய போட்டிகளில் வெற்றி பெற்ற பெண்களுக்கு பாராட்டுச் சான்றிதழ்கள் மற்றும் பரிசுகளை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்வின் போது, திட்ட அலுவலர்(மகளிர் திட்டம்) திரு. கோமகன், மாவட்ட சமூக நல அலுவலர் திருமதி. அம்பிகா, துணை ஆட்சியர்(பயிற்சி) திருமதி.விஷ்ணுவர்த்தினி, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலர் திருமதி.மரகதம், அரசு அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருப்பூர் மாவட்டம்.**